செ.வெ.எண் :208 நாள் : 23.09.2025

<u>**செய்தி வெளியீடு**</u>

**சென்னை மாவட்டத்தில் குழந்தைகள் உதவி மையம் மற்றும் ரயில்வே கியோஸ்க்–ல் ஒப்பந்த அடிப்படையில் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித் தலைவர்**

**திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச்சேவைகள் துறையின் கீழ் அமைக்கப்பட்ட மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்கான மாவட்ட குழந்தைகள் உதவி மையம் மற்றும் ரயில்வே கியோஸ்க்–ல் கீழ்காணும் பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால் , அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவி | பணியிடத்தின் எண்ணிக்கை | கல்வித்தகுதி | வயது மற்றும் மாத ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | திட்ட ஒருங்கிணைப்பாளர் | ஒன்று(1) | • சமூகப் பணியில் முதுகலைப் பட்டம்/சமூகவியல்/குழந்தைகள் மேம்பாடு/மனிதபொது உரிமைகள்நிர்வாகம்/உளவியல்/ மனநல மருத்துவம்/சட்டம்/பொது சுகாதாரம்/சமூக வளம்<br>• அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகத்தில் மேலாண்மை, அல்லதுசமூகப்பணி/சமூகவியல்/ குழந்தைகள்மேம்பாடு/மனித பொது உரிமைகள்நிர்வாகம்/உளவியல்/ மனநலமருத்துவம்/சட்டம்/பொது சுகாதாரம்/சமூக வளம்<br>• அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் மேலாண்மை பட்டம்<br>• திட்டஉருவாக்கம்/செயல்படுத்தல் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை ஆகியவற்றில் 2 வருட அனுபவம்<br>• பெண்கள் மற்றும் குழந்தைகள்மேம்பாடு/சமூகநலம் | 42 வயது மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது.<br><br>ரூ.28,000/ (மதிப்பூதியம்) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆகியவற்றில் பணி புரிந்தவருக்கு முன்னுரிமை.<br>• கணினியில் தேர்ச்சி.அவசர உதவி எண்களில்பணிபுரியும் பணியாளர்களுக்குமுன்னுரிமை அளிக்கப்படும். | |
| 2. | மேற்பார்வை யாளர் | இரண்டு(8) | • அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சமூகப்பணி/கணினி அறிவியல்/தகவல்தொழில்நுட்பம்/சமூகவியல்/சமூக அறிவியல் ஆகியவற்றில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்..<br>• கணினித் துறையில் தேர்ச்சி மற்றும் அவசர உதவி எண்களில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 42 வயது மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது.<br><br>ரூ.21,000/- (மதிப்பூதியம்) |
| 2 | ஆற்றுப்படுத் துநர் | ஒன்று(1) | • அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சமூகப் பணி / சமூகவியல் / உளவியல் / பொது சுகாதாரம் / உளவியல் ஆகியவற்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். (அல்லது) உளவியல் மற்றும் தொடர்பியல் துறையில் முதுகலை டிப்ளமோ முடித்திருக்க வேண்டும்.<br>• பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையில் அரசு / தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட பணி அனுபவம்.<br>• கணினிதேர்ச்சி மற்றும் அவசர உதவி மையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 42 வயது மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது.<br><br>ரூ.23,000/- (மதிப்பூதியம்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வழக்குப் பணியாளர் | நான்கு(10) | • அங்கீகரிக்கப்பட்ட வாரியம்/சமமான வாரியத்திலிருந்து 12 ஆம் வகுப்பு தேர்ச்சி. நல்ல தகவல் தொடர்பு திறன்<br>• அவசர உதவி எண்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 42 வயது மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது.<br><br>ரூ.18,000/– (மதிப்பூதியம்) |

- இப்பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது
- ஒன்றுக்கு மேற்பட்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் தனி தனி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டும்.
- காலிப்பணியிடங்களை அதிகரிப்பதோ, குறைப்பதோ இத்துறையின் முடிவிற்கு உட்பட்டது.
- இதற்கான விண்ணப்பபடிவங்கள் மற்றும் விவரங்கள் https://chennai.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம் .
- மேற்காணும் பணியிடத்திற்கு நேர்முக தேர்வு மூலம் தேர்வு செய்யப்படும் நபர், பணியில் சேரும் நாளன்று காவல் துறை சரிபார்ப்பு சான்றிதழ் (Police Verification) கட்டாயமாக சமர்பிக்க வேண்டும்.
- தகுதி வாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு உரிய படிவத்தில் புகைப்படம் மற்றும் சுயக் கையொப்பமிட்ட சான்றிதழ்களுடன் இணைத்து செய்தி வெளியீடு செய்யப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் மாலை மாலை 5.45 மணிக்குள் அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ கிடைக்குமாறு சமர்ப்பிக்கலாம்.

**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,**
**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,சென்னை –தெற்கு**
**எண்:1, புதுத்தெரு, வணிக வளாகம்GCC, முதல் மாடி,**
**ஆலந்தூர், சென்னை –600016 RTO office அருகில்**

முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைக்கொண்டிராதவர்கள் மற்றும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேராத விண்ணப்பங்கள் ஆகியன பரிசீலிக்கப்படாது தகுதி மற்றும் அனுபவத்தில் அடிப்படையில் நியமனம் அமையும். இதுகுறித்து அரசின் முடிவே இறுதியானது.

************

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலம்,**
**சென்னை –01.**